# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**
www.tsch.org.au info@tsch.org.au


**பேச்சுப்போட்டி 2020** **ஆறாம் வகுப்பு**

அனைவருக்கும் வணக்கம்

## புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களும் தமிழ்மொழித் தேவையும்

”தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும்” என்று பாரதி சொன்னான். அது வெறும் கனவல்ல, தீர்க்கதரிசனம். ஆம், இன்று உலகமெல்லாம் இனிய தமிழோசை ஒலிக்கிறது. முன்னர் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் என்ற சிறிய வட்டத்துக்குள் வாழ்ந்த தமிழர்கள் இன்று கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரித்தானியா, மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும், புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். இப்போது எங்களுக்கு முக்கியமான கேள்வி எழுகிறது. எங்கள் தமிழினத்தின் அடையாளமான தமிழ்மொழியினை புலம்பெயர்ந்த நாடுகளிலும் பேணப்போகிறோமா? அல்லது புலம் பெயர்ந்து விட்டோம் இனி எமக்கு வேண்டாம் என்று தமிழ்மொழி தெரியாத தமிழர்களாக சொந்த அடையாளத்தை தொலைத்த சமூகமாக வாழப்போகிறோமா?

இனிய மொழியாம் செந்தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் அந்நிய நாடுகளில் வந்துகுடியேறும்போது தமிழ்மொழியையும், தமிழ் கலாசாரத்தையும் பேணவேண்டிய தேவை ஏற்படுகிறது. மொழி, கலாசாரம், பாரம்பரியங்கள் என்பவற்றைப் பேணும் வரைதான் நாம் தமிழினம் என்று உரிமை கொண்டாடலாம்.

தமிழ்த்தாயின் வயிற்றில் பிறந்தால் மாத்திரம் தமிழ் ஒரு குழந்தையின் தாய்மொழியாகிவிடாது. தமிழ்மொழி வீட்டில் பேசப்படும் மொழியாக இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களை பெற்றோரும், தமிழ் சமூகத்தினரும் ஏற்படுத்தும் போதுதான் தமிழ் அந்தக்குழந்தையின் தாய்மொழியாகத் தொடர்ந்து இருக்கமுடியும்.

நன்றி
வணக்கம்